**தலைப்பு 271 – திருகோணமலை மாவட்ட செயலகம்**

## 1. நிதிக் கூற்றுக்கள

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம

தலைப்பு 271 – திருகோணமலை மாவட்ட செயலகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயற்பாட்டு கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்களும் அடங்கிய நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்புடைய குறிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் அடங்கிய பொழிப்பு அறிக்கை 2024 மே மாதம் 31 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விபரமான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 மே மாதம் 30 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, திருகோணமலை மாவட்ட செயலகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பந்தியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன

## 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்கவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையானதும் நியாமானதுமான நிலைமையினைப் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்பட முடியுமான பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்வதற்கு இயலுமானவாறு தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு ஆகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திருகோணமலை மாவட்ட செயலகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) ஆம் உபபிரிவின் பிரகாரம் திருகோணமலை மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாடு பொருட்டு பயனுறு உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணப்படுகிறது என கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டும் என்பதுடன், அம்முறைமையின் பயனுறுத்தன்மை தொடர்பாக அவ்வப்போது மீளாய்வு மேற்கொண்டு அதற்கேற்ப முறைமையினை பயனுறுவாக பேணுவதற்குத் தேவையான மாற்றங்களை மேற்கொள்ளுதலும் வேண்டும.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத்

தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுக்ள மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின்போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு காண்புகள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்/கணக்கீட்டு உத்தியோகத்தர் தெரியப்படுத்தப்பட்டுள்ளார்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திசைவாக உள்ளன என,

(ஆ) முன்னைய ஆண்டுக்கு ஏற்புடையதாக நிதிக் கூற்றுக்கள் தொடர்பான என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பிலான கருத்துரை

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மூலதனச் செலவினங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்றின் (ACA-F) மூலதனச் செலவினங்களின் கூட்டுத்தொகை ரூபா62,795,088 ஆக இருந்தது. அத்தொகை மீளாய்வாண்டில் காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கைகளின் மூலம் உருவாக்கப்பட்ட | கணக்காய்வுமூலம் அவதானிக்கப்பட்ட வேறுபாடான ரூபா 62,795,087 தொகையானது 2023 ஆம் ஆண்டில் உறப்பட்ட மூலதனச் செலவினமாகும். | காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கைகளின் மூலம் உருவாக்கப்பட்ட காசுப்பாய்வின் கீழ் சேர்க்கப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| காசுப்பாய்வின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை என்பதுடன் செயற்பாட்டு நடவடிக்கைகளில் ஏனைய செலவினத் தலைப்பு பொருட்டு உறப்பட்ட செலவுகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | இருப்பினும், 2023 நிதிக்கூற்றுக்களில், ஏனைய செலவு தலைப்பு பொருட்டு உறப்பட்ட செலவில் அது தவறாக சேர்க்கப்பட்டிருந்தது. இனிமேல் இதுபோன்ற தவறுகள் இடம்பெறாது என்பதை தயவுசெய்து கவனிக்கவும். |

(ஆ) **ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 04 நிதியல்லாத சொத்துக் குறியீடுகளின் ஆரம்ப மீதிகளின் கூட்டுத்தொகை திறைசேரி அச்சின்படி (SA 80) ரூபா 3,930,408,810 ஆகவும், திரண்ட நிதியல்லாத சொத்துக் கணக்கு அறிக்கையின்படி (SA-82) ரூபா5,515,201,207 ஆகவும் இருந்தது. அதன்படி, மேற்கூறிய இரண்டு கூற்றுகளுக்கும் இடையே ஆரம்ப மீதிகளில் ரூபா 1,584,792,397 வேறுபாடு காணப்பட்டது. | SA-80 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நடைமுறை அல்லாத சொத்துக்களின் ஆரம்ப மீதி 2023 இல் பெறப்பட்ட நிதி அல்லாத சொத்துக்கள் CIGAS இல் உரியவாறு சேர்க்கப்படாத காரணத்தினால் சரியாக காட்டப்படாமல் இருந்திருக்கலாம். இனிமேல் இதுபோன்ற தவறுகள் இடம்பெறாது என்பதை தயவுசெய்து கவனிக்கவும். | கணக்கு நடவடிக்கைகளுக்கு ஆதாரமான மூல ஆவணங்கள் உரியவாறு நாளதுவரைப்படுத்தப்படல் வேண்டும். |
| (ii) | திறைசேரி அச்சு இலக்கம் SA-80இன்படி, தலைப்பு 271 க்கு ஏற்புடையதாக மீளாய்வாண்டில் நிதி அல்லாத சொத்துக்களை பெற்றுக்கொள்ளும் (கைமாற்றல் மற்றும் கொள்வனவு) மொத்த பெறுமதி ரூபா1,587,751,879 ஆக இருந்தபோதிலும், திரண்ட நிதியல்லாத சொத்துக் கணக்கு அறிக்கையின் (SA-82) பிரகாரம் ரூபா 3,976,792 ஆக இருந்தது. அதன்படி, இரண்டு அறிக்கைகளுக்கும் இடையே ரூபா 1,583,775,087 வேறுபாடு காணப்பட்டது. | சில பிரதேச செயலகங்களால் CIGAS முறைமை வருடத்தினுள் தேவைக்கேற்ப நாளதுவரைப்படுத்தப்படாமையால் அவ்வாறான மாற்றம் ஏற்பட்டுள்ளது. இனிமேல் அத்தவறு இடம்பெறாது என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். | கணக்கு நடவடிக்கைகளுக்கு ஆதாரமான மூல ஆவணங்கள் உரியவாறு நாளதுவரைப்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | தலைப்பு இலக்கம் 271 க்கு ஏற்புடையதாக, மீளாய்வாண்டில் நிதி அல்லாத சொத்துக்கள் கையுதிர்த்தல்களின் மொத்த பெறுமதி திறைசேரி அச்சு இலக்கம் SA-80இன்படி ரூபா 987,770 ஆக இருந்தபோதிலும், திரண்ட நிதியல்லாத சொத்துக் கணக்கு அறிக்கையின் (SA-82) பிரகாரம் அப்பெறுமதி ரூபா 1,400,467 ஆக இருந்தது. அதன்படி, இரண்டு அறிக்கைகளுக்கும் இடையே ரூபா 412,697 வேறுபாடு காணப்பட்டது. | CIGAS விடயத்திற்குப் பொறுப்பான பெண் உத்தியோகத்தர் இந்த விடயத்திற்கு புதியவர் என்பதனால் நிதி அல்லாத சொத்துக்கள் கையுதிர்த்தல்களின் பெறுமதி திரண்ட நிதி அல்லாத சொத்துக் கணக்கில் தவறாகக் காட்டப்பட்டுள்ளது. இனிமேல் அத்தவறு இடம்பெறாது என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். | புதிய உத்தியோகத்தர்களை பயிற்றுவித்தல் மற்றும் கணக்கு நடவடிக்கைகளை உரியவாறு மேற்பார்வை செய்தல் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (iv) | திறைசேரி அச்சு இலக்கம் SA-80இன்படி ரூபா 1,587,751,879 ஆன நிதி அல்லாத சொத்துக்களின் கொள்வனவு காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கைகளின் மூலம் உருவாக்கப்பட்ட காசுப்பாய்வின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை. | SA 80 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நடைமுறை அல்லாத சொத்துக்களின் ஆரம்ப மீதி, 2023 இல் பெறப்பட்ட நிதி அல்லாத சொத்துக்கள் உரியவாறு CIGAS இல் சரியாக சேர்க்கப்பட்டிருக்கவில்லை. | மூல ஆவணங்கள் உரியவாறு நாளதுவரைப்படுத்தப்படல் வேண்டும். |

(இ) கட்டுநிதி மீதி

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | கட்டுநிதி சீராக்கல் கூற்று (ACA-07) பிரகாரம், ஏனைய நிறுவனங்களின் சார்பாக மாவட்ட செயலகத்தால் உறப்பட்ட செலவு ரூபா 2,071,574,243 ஆக இருந்தபோதிலும், காசுப்பாய்ச்சல் கூற்று (ACA-C) பிரகாரம், அம்மீதி ரூபா 2,134,369,330 ஆக இருந்தது. அதன்படி, மேற்படி இரண்டு அறிக்கைகளுக்கும் இடையே ரூபா 62,795,087 வேறுபாடு காணப்பட்டது. | கணக்காய்வுமூலம் அவதானிக்கப்பட்ட வேறுபாடான ரூபா 62,795,087 தொகை 2023 ஆம் ஆண்டில் உறப்பட்ட மூலதனச் செலவாகும். இருப்பினும், 2023 நிதிக்கூற்றுக்களில், ஏனைய செலவு தலைப்பு பொருட்டு உறப்பட்ட செலவில் அது தவறாக சேர்க்கப்பட்டிருந்தது. இனிமேல் இதுபோன்ற தவறுகள் இடம்பெறாது என்பதை தயவுசெய்து கவனிக்கவும். | பதிவேடுகளுக்கு இடையிலான மீதிகளில் துல்லியம் இருத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மாவட்டச் செயலகத்தின் சார்பாக மற்ற அமைச்சுக்கள்/திணைக்களங்களினால் உறப்பட்ட செலவினம் ரூபா 2,071,569,017 ஆக இருந்தபோதிலும், காசுப்பாய்ச்சல் கூற்று (ACA-C) பிரகாரம், அது ரூபா 2,134,369,330 ஆகக் காட்டப்பட்டிருந்தது. அதன்படி, மாவட்ட செயலகத்தால் தயாரிக்கப்பட்ட மற்றைய அமைச்சுக்கள்/திணைக்கள செலவு அட்டவணைகளுடன் ஒப்பிடும் போது காசுப்பாய்ச்சல் கூற்றின்படி ரூபா 62,800,313 வேறுபாடு காணப்பட்டது. | தீர்க்கப்படாமல் நிலுவையாக இருந்த தொகை 2022 நிதிக்கூற்றுக்களின் கட்டுப்பாட்டுப் பொழிப்பில் சேர்க்கப்படாதிருந்த மூதூர் பிரதேச செயலகத்தின் திருத்தப்பட்ட பொழிப்புக்குச் சொந்தமான ரூபா 5,225 ஆகும், வேறுபாட்டினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை தயவுசெய்து கவனிக்கவும். | சரியான தகவல்களை நிதிக்கூற்றுக்கள் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 18/2020 ஆம் இலக்க மற்றும் 2020 ஒக்டோபர் 16 ஆம் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின்படி, அரசகரும மொழிக் கொள்கையை அமுல்படுத்துவது தொடர்பாக உத்தியோகத்தர்களால் பின்பற்றப்பட வேண்டிய சிங்களம் மற்றும் தமிழ் மொழி பாடநெறிகள் பொருட்டு பங்குபற்றியமைக்கான பிரயாணச் செலவுகள் மற்றும் இணைந்த படிகள் செலுத்த முடியாதபோதிலும், மீளாய்வாண்டில் மொறவெவ மற்றும் கிண்ணியா பிரதேச செயலகங்களின் 33 உத்தியோகத்தர்களுக்கு மொத்தமாக ரூபா 514,483 பிரயாணச் செலவுகள் மற்றும் இணைந்த படிகள் செலுத்தப்பட்டிருநதன. | உரிய கொடுப்பனவுகள் தொடர்பாக விசாரிக்கப்பட்டுள்ளது. | அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின்படி செயலாற்றுதல் வேண்டும். |
| (ஆ) | மொறவெவ பிரதேச செயலகத்தில் பொதுமக்கள் காத்திருப்பு அறை ஒன்றை அமைப்பதற்காக ரூபா 46,175 பெறுமதியான காசோலை 2023 நவம்பர் 30 ஆம் திகதியன்று உதவி பிரதேச செயலாளர் பெயரில் வழங்கப்பட்டிருந்தது. 2024 மார்ச் 26 ஆம் திகதிவரையிலும் காசோலை கையில் இருந்ததுடன், இந்த | இந்த காத்திருப்பு அறையின் கட்டுமான பணி மழை காரணமாக தாமதமாகியது. 2023 ஆம் ஆண்டு கணக்குகளை தீர்ப்பதற்கு முன் பணிகள் | அரச நிதியை உரிய முகாமையுடனும் மேற்பார்வையுடனும் பயன்படுத்துதல் வேண்டும். |

| | |
|---|---|
| காத்திருப்பு அறையின் கட்டுமானப் பணிகள் அதுவரையிலும் முடிக்கப்பட்டிருக்கவில்லை. சிறு கட்டுமானப் பணியொன்றுக்காக ஊழியம் 21 நாட்கள் பொருட்டு நாள் ஒன்றுக்கு தலா ரூபா 2,200 மொத்தச் செலவு ரூபா 46,175 தொழில் கூலியாக காசோலை மூலம் பணம் ஒதுக்கப்பட்டிருந்தபோதிலும், காசோலையை ஒப்பந்தகாரர் அல்லது தொழிலாளி பெயரில் வழங்காமல் உதவி பிரதேச செயலாளர் பெயரில் வழங்கப்பட்டிருந்தது. | முடிக்கப்படாமையினால் காசோலை பிடித்துவைக்கப்பட்டுள்ளது. ஊழிய நாட்களைக் கணக்கிடுவதில் உள்ள குறைபாடு தொழில்நுட்ப உத்தியோகத்தரின் தலையீட்டின் மூலம் பணம் செலுத்துவதற்கு முன்பே சரிசெய்யப்பட்டது. |

## 2.2 மேலதிக கொடுப்பனவுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கிராமிய வீதி அபிவிருத்திச் செயற்றிட்டம்-2021 பொருட்டு கொடுப்பனவுகளைச் செய்யும்போது, வெருகல் பிரதேச செயலகத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தரால் தயாரிக்கப்பட்டு பிரதி திட்டமிடல் பணிப்பாளரினால் பரிந்துரைக்கப்பட்ட 11 பணிகளுக்கான வேலை அறிக்கையின்படி பூர்த்தி செய்யப்பட்ட வேலைகளின் பெறுமதி ரூபா 2,575,900 ஆன போதிலும், ஒப்பந்தகாரருக்கு ரூபா 5,541,835 செலுத்தப்பட்டிருந்தது. | கிராமிய வீதி அபிவிருத்திச் செயற்றிட்டம்- 2021 பொருட்டு கொடுப்பனவுகளைச் செய்யும்போது, வெருகல் பிரதேச செயலகத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தரால் தயாரிக்கப்பட்டு பிரதி திட்டமிடல் பணிப்பாளரால் பரிந்துரைக்கப்பட்ட 11 பணிகளுக்கான செய்யப்பட்ட வேலை ிி அறிக்கைகளை சான்றளிக்கப்பட்டதன் பிற்பாடு பணம் செலுத்தப்பட்டுள்ளது என்பதை தயவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். | மேலதிக கொடுப்பனவுகளை மீள அறவிடுதல் வேண்டும். |
| (ஆ) | மொறவெவ பிரதேச செயலகத்தின் புதிய அலுவலகக் கட்டட நிர்மாணத்தின் கட்டம் I இல் 12 BOQ விடயங்கள் பொருட்டு ரூபா 2.5 மில்லியன் மதிப்பிடப்பட்டிருந்த போதிலும், ஆறு BOQ விடயங்கள் பொருட்டு செலுத்தப்பட்ட தொகை 2023 மே மாதம் பிரகடனப்படுத்தப்பட்ட மாவட்ட செயலகத்தின் BSR விகிதத்தை விஞ்சி இருந்தது. அதன்படி ரூபா 178,171 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. மொறவெவ பிரதேச செயலகத்தின் புதிய அலுவலகக் கடடடத்தை நிர்மாணிப்பதற்கான கட்டம் I இல் 12 BOQ விடயங்கள் பொருட்டு ரூபா 2.5 மில்லியன் | மேலதிக கொடுப்பனவு ஒன்று இடம்பெற்றுள்ளது. | மேலதிக கொடுப்பனவுகளை மீள அறவிடுதல் வேண்டும். |

மதிப்பிடப்பட்டிருந்த போதிலும், 2023 மே மாதம் பிரகடனப்படுத்தப்பட்ட மாவட்ட செயலகத்தின் BSR விகிதத்தை விஞ்சி மேலதிக கொடுப்பனவு ஒன்று இடம்பெற்றுள்ளது. உரிய திட்டமிடலுடனும் முகாமையுடனும் அரச நிதி கொடுப்பனவுக்காக பயன்படுத்த வேண்டும்.

**2.3 பிற அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதியேற்பாடு பயன்படுத்தப்படாமை**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கர்ப்பிணித் தாய்மார்களுக்கு போசாக்குப் பொதி கொடுப்பனவு வழங்குவதற்காக 2023 சனவரி முதல் செப்தெம்பர் வரையிலான கொடுப்பனவு நடவடிக்கைகளுக்காக வெருகல் பிரதேச செயலகத்திற்கு ரூபா 6,196,500 நிதியேற்பாடு மாவட்ட செயலகத்தினால் வழங்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 5,292,000 நிதியேற்பாடு பயன்படுத்தப்படாமல் பிடித்து வைக்கப்பட்டுள்ளது. | வழங்குநர்களைத் தேடி கண்டறிவதில் கடுமையான சிரமம் இருப்பதால், நிதியேற்பாடு பயன்படுத்தப்படாமல் பிடித்து வைக்கப்பதற்கு நேரிட்டுள்ளது. | நிதியேற்பாடானது கர்ப்பிணித் தாய்மார்களுக்கு பயன்படும் விதத்தில் நடவடிக்கைகளை திட்டமிடுதல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் ஆடுகளை வளர்க்கும் செயற்றிட்டத்தில் மாவட்ட செயலாளரின் GAT/PLa.Goat/DO.02/01/01ஆம் இலக்க 2023 யூன் 02 ஆம் திகதிய கடிதத்தின்படி, கொள்வனவு செய்யப்படும் ஆடுகளின் விவரணக்குறிப்புகளின் (Specification) பிரகாரம் நல்ல ஆரோக்கியத்துடனான ஆடுகளைத் தேர்ந்தெடுக்க வேண்டிய போதிலும், 2023 செப்தெம்பர் 23, ஆம் திகதின்று 16 பயனாளிகளுக்கு விநியோகிக்கப்பட்ட மொத்தம் ரூபா 947,118 ஆன 44 ஆடுகள் வழங்குநரின் பிரதேசத்திலிருந்து தம்பலகமுவ பிரதேச செயலகத்திற்கு கொண்டு செல்லப்படும்போது பெறப்பட வேண்டிய 1958 இன் 29ஆம் இலக்க விலங்குகள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் ஆடுகளுக்கான சுகாதாரச் சான்றிதழ் (Certificate of Health) பெறப்படாமல் கொண்டு செல்லப்பட்டிருந்தன. | கொள்வனவு செய்யப்படும் ஆடுகளின் விவரணக்குறிப்புகளின் பிரகாரம் நல்ல ஆரோக்கியத்துடனான ஆடுகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்ததுடன், ஆடுகளுக்கு சுகாதார சான்றிதழ் கிடைப்பதில் காலதாமதம் ஏற்பட்டதென அறியத்தருவதுடன், மிருக வைத்தியரின் அறிவுறுத்தல்களின்படி கொண்டு செல்லல் மேற்கொள்ளப்பட்டது. | தேவையான தர சான்றிதழை உரிய நேரத்திலேயே பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2022/2023 பெரும் போகத்தில் அரசாங்க நெல் கொள்வனவு தொடர்பாக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் எண். DFD/2023-1 ஆம் இலக்க 2023 பெப்ரவரி 09ஆம் திகதிய சுற்றறிக்கையின் பந்தி 2.3.2 இன் படி, கையிலலுள்ள நெல் இருப்பு 2023 மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களுக்குள் விநியோகிப்பதற்கு ஏற்றவாறு அரிசியாக மாற்றி முடிப்பதற்கு சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்களின் கொள்ளளவைக் கருத்திற்கொண்டு நெல் கொள்வனவு செய்வதற்குத் தேவையான பணத்தை உரிய அரிசி ஆலை உரிமையாளருக்கு வழங்க வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது. இருப்பினும், 2023 ஒக்டோபர் 12 ஆம் திகதிய கணக்காய்வு வெளிக்கள சோதனையின் போது, பதவி ஸ்ரீ புர பிரதேச செயலகத்தில் அமைந்துள்ள நெல் ஆலை களஞ்சியமொன்றில் மொத்தமாக ரூபா 42,744,000 ஆன 427,440 கிலோகிராம் நெல் இருப்பு காணப்பட்டது. | கையிலலுள்ள நெல் இருப்பு 2023 மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களுக்குள் விநியோகிப்பதற்கு ஏற்றவாறு அரிசியாக மாற்றி முடிப்பதற்கு திட்டமிட்டிருந்த போதிலும், கனமழை காரணமாக நெல் இருப்புக்களை அரிசியாக மாற்றும் சிக்கல் ஏற்பட்டுள்ளதால், திமுது நெல் ஆலை களஞ்சியத்தில் நெல் இருப்புக்கள் நீண்டகாலமாக உள்ளன என்பதை தயவுடன் அறிவிக்கின்றேன். | அரசாங்கத்தின் திட்டங்களை உரிய விதத்தில் செயற்படுத்துவதற்கு ஏற்றவாறு நடவடிக்கைகளை திட்டமிடுதல் வேண்டும். |

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

மாதிரி கணக்காய்வு சோதனையின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

| | அவதானிப்பு | | | | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு** | **பெறுமதி ரூ.** | **இணக்கமின்மை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | |
| (அ) | 09/2009 ஆம் இலக்க மற்றும் 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய அரசாங்க | 4,581,676 | மேலதிக நேரம் மற்றும் லீவு நாட்களுக்கான கொடுப்பனவுகளை செய்யும்போது கைவிரல் அடையாள பொறி மூலம் உறுதிப்படுத்துவது | கைவிரல் அடையாள பொறி செயல்படாத காலங்களில் பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரின் மேற்பார்வையின் கீழ் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயலாற்றுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிர்வாக சுற்றறிக்கையின் பந்தி 2 (iv) | அத்தியாவசியமான போதிலும், மொறவெவ, பதவி ஸ்ரீ புர, கோமரன்கடவல, சேருவில ஆகிய பிரதேச செயலக உத்தியோகத்தர்களினால் அவ்வாறு செய்யாமல் மீளாய்வாண்டில் மேலதிக நேரம் மற்றும் லீவு நாட்கள் சம்பளத்தை பெற்றுள்ளனர். | வருகை மற்றும் வெளியேறல் பதிவேட்டினை அடிப்படையாகக் கொண்டு பணம் செலுத்தப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 09/2009 ஆம் இலக்க மற்றும் 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை | அனைத்து அரச உத்தியோகத்தர்களும் தமது வருகை மற்றும் வெளியேறலை கைவிரல் அடையாள பொறி மூலம் உறுதிப்படுத்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ள போதிலும், சேருவில பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர், உதவி பிரதேச செயலாளர், கணக்காளர் ஆகியோர் 2023 ஆம் ஆண்டு முழுவதும் அத்துடன் கோமரங்கடவல பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர்கள் 2023 சனவரி முதல் நவம்பர் வரை அதற்கேற்ப செயற்றியிருக்கவில்லை | எதிர்காலத்தில் வழிகாட்டுநெறிகளை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயலாற்றுதல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கணக்குகள் சுற்றறிக்கை இலக்கம் 02/2018 மற்றும் 2018 சனவரி 29 | அனைத்து பிரதேச செயலகங்களின் உகப்பான இலக்குகளை சுருக்கி மாவட்ட | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் |

| | | | |
|---|---|---|---|
| | திகதிய சுற்றறிக்கையின்படி, பிரதேச செயலகம் பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்ற சேவைகளை முன்னுரிமைப்படுத்தி 5 பிரதான சேவைகளுக்கு ஏற்புடையதாக உகப்பான இலக்குகளை நிர்ணயித்து அந்த இலக்குகள் பற்றிய அறிக்கையை மாவட்ட செயலகத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும். குறித்த சுற்றறிக்கையின் 2.5 மற்றும் 2.6 பந்திகளின்படி, அனைத்து பிரதேச செயலகங்களின் உகப்பான இலக்குகளை சுருக்கி மாவட்ட செயலகத்தினால் தயாரிக்கப்பட்ட அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் பிரதிகள் சகிதம் உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு ஒவ்வொரு வருடமும் சனவரி 15 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்ட செயலகம் 2023 ஆம் ஆண்டுக்கான குறித்த அறிக்கைகளை சமர்ப்பிக்கவில்லை. | செயலகத்தினால் தயாரிக்கப்பட்ட அறிக்கையை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்தல் தவறவிடப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இதுபோன்ற தாமதங்கள் தவிர்க்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | செயலாற்றுதல் வேண்டும். |
| (ஆ) | 2016 யூன் 30ஆம் திகதியன்று தயாரிக்கப்பட்ட திருகோணமலை மாவட்ட மீள்குடியேற்றத் திட்டத்தில் அடங்கிய தகவல்களின்படி, கோமரங்கடவல மற்றும் பதவி ஸ்ரீ புர பிரதேச செயலகப் பிரிவில் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த குடும்பங்களின் எண்ணிக்கை 505 ஆகவும், மீள்குடியேற்றத்தின் பின்னர் வீட்டுத் தேவை 994 ஆகவும் காணப்பட்டதுடன், 651 வீடுகள் அரசாங்க மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களினாலும், 124 வீடுகள் உரிமையாளர்களினாலும் கட்டப்பட்டிருந்தமையினால், மேலும் கட்டப்பட வேண்டிய வீடுகளின் எண்ணிக்கை 219 ஆக இருந்தது. 2016, 2017, 2019 மற்றும் 2020 ஆகிய ஆண்டுகளில் அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட வீட்டுத் திட்டங்களின் ஊடாக 283 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டதன் காரணமாக 2020 ஆம் ஆண்டளவில் வீட்டுத் தேவைக்கு மேலதிகமாக 64 வீடுகள் கட்டப்பட்டிருந்தன. 2021 ஆம் | பிரிவிலிருந்து வெளியேறிய நபர்கள் மீள வசிப்பதற்கு வருவதற்காக பல்வேறு சந்தர்ப்பங்களில் கோரிக்கைகளை முன்வைக்கின்றனர். அந்தக் குடும்பங்களின் துணைக் குடும்ப விவரங்கள் உறுதியானவையல்ல. அதன்படி, திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களை விஞ்சும் வாய்ப்பு மென்மேலும் உள்ளதால், 2021ம் ஆண்டில் அனைத்து கிராம அலுவலர் பிரிவுகளையும் உள்ளடக்கும் வகையில், தகுதியான பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு முன்னுரிமை அளிக்கப்பட்டது. அதன்படி, 2023ஆம் ஆண்டு குறைந்த வருமானம் பெறும் 08 பயனாளிகள் மற்றும் மீள்குடியேற்றப்பட்ட 05 பயனாளிகள் அடங்கிய பயனாளிகள் பட்டியல் | கிழக்கு மாகாண பிரதம செயலாளர் மற்றும் திருகோணமலை மாவட்ட செயலாளர் ஆகியோரின் திருகோணமலை மாவட்ட மீள்குடியேற்றல் திட்டத்தை நாளதுவரைப்படுத்தி சரியான தகவல்களை உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஆண்டிலும் அவ்வாறு இடம்பெயர்ந்தவர்களாக இனங்காணப்பட்ட 89 வீடுகளுக்கான அங்கீகாரம் மீள்குடியேற்றத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட வீட்டுத் தேவையை விஞ்சி 153 வீடுகள் கட்டப்பட்டிருந்த போதிலும், 2023 ஆம் ஆண்டில், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் 23 வீடுகள், கோமரன்கடவல மற்றும் பதவி ஸ்ரீ புர பிரதேச செயலங்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. | அங்கீகரிக்கப்பட்டு வீடமைப்புத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக அமைச்சினால் எங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. | |

## 3.2 பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| யுத்தத்தினால் இடம்பெயர்ந்த மக்களுக்கு நிரந்தர வீடுகளை நிர்மாணிக்கும் செயற்றிட்டம்-2021 இன் முன்னேற்ற அறிக்கையின்படி, வெருகல் பிரதேச செயலகத்தினால் 2023 செப்தெம்பர் 07 ஆம் திகதி மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்ட ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான 07 வீடுகள் பௌதிக ரீதியாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும், 2023 நவம்பர் 10 ஆம் திகதியன்று நடந்த கணக்காய்வு சோதனையின்போது, மொத்தம் ரூபா 425,000 தொகை பணிகளை நிறைவேற்றாமல் உரிய பயனாளிகளின் சமுர்த்தி வங்கிக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. | யுத்தத்தினால் இடம்பெயர்ந்த மக்களுக்கு நிரந்தர வீடுகளை நிர்மாணிக்கும் செயற்றிட்டம்-2021 இன் கீழ் அரச பணத்தில் கட்டி முடிக்கப்பட வேண்டிய பாகங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. பௌதிக ரீதியாக முழுமையாக முடிக்கப்படாத வீடுகளின் உரிமையாளர்களுக்கு வேலைகள் முடியும் வரை பணம் விடுவிக்கப்படாமல் அவ்வாறு பிடித்து வைப்பதற்கு காரணமாக அமைந்தது. பயனாளிகள் சிலர் வெளிநாடு சென்றுள்ளமையினால் உரிய பயனாளிகளின் பணம் சமுர்த்தி வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளது. | செயற்றிட்ட முன்னேற்ற அறிக்கை உண்மையான தகவல்களின் அடிப்படையில் சமர்ப்பித்தல் வேண்டும். |

## 3.3 எதிர்பார்த்த பூர்த்தியாக்கல் மட்டத்தை அடைந்து கொள்ளாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டில் வெருகல் பிரதேச செயலகத்தின் SMRHC/RD/04/01 ஆம் இலக்க கடிதத்தின் பந்தி 4.4 பிரகாரம், யுத்தத்தினால் இடம்பெயர்ந்த மக்களுக்காக நிரந்தர வீடமைப்பு செயற்றிட்டத்திற்காக ரூபா 600,000 பெறுமதியான 15 வீடுகளை நிர்மாணிப்பதற்கு மொத்தம் ரூபா 8.96 மில்லியன் மொத்தத் தொகை பயனாளிகளின் வங்கிக் கணக்குகளுக்கு நான்கு கட்டங்களில் 2021 ஆம் ஆண்டில் வைப்புச் செய்யப்பட்ட போதிலும், 2023 நவம்பர் 10 ஆம் திகதியன்று நடந்த கணக்காய்வு சோதனையின்போது, 15 பயனாளிகளின் மொத்தமாக ரூபா 1.227 மில்லியன் சமுர்த்தி வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது. | கருத்து தெரிவிக்கவில்லை. | செயற்றிட்டங்களின் எதிர்பார்த்த பூர்த்தியாக்கல் மட்டத்தை அவ்வாறே அடைந்து கொள்வதற்கு செயலாற்றுதல் வேண்டும். |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டினுள் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட வீடமைப்புத் திட்டம் மொறவெவ, பதவி ஸ்ரீ புர, கோமரங்கடவல, சேருவில, கந்தளாய் ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் குறித்த காலத்தில் முடிவுறுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன், 2023 திசெம்பர் 31 ஆம் திகதியளவிலும் 01 மில்லியன் ரூபா பெறுமதியான 83 வீடுகளையும் ரூபா 600,000 பெறுமதியான 74 வீடுகளையும் முழுமையாக முடிவுறுத்துவதற்கு இயலாமற்போனது. | கட்டுநிதி பெறுவதில் காலதாமதம் ஏற்பட்டமையினால், செயற்றிட்டத்தை முடிவுறுத்துவதற்கு இயலாமற்போனது. கட்டுமானங்களின் பௌதிக முன்னேற்றம் உறுதி செய்யப்பட்ட பின்னர் பணம் செலுத்தப்பட்டது. சில கட்டுமானங்கள் பூர்த்தியாக்கும் வரை பணம் வங்கியில் பிடித்துவைக்கப்பட்டுள்ளது. | வீடுகளின் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2021ஆம் ஆண்டு வீடுகளை நிர்மாணிப்பது தொடர்பான முன்னேற்றங்களைக் காட்டும் அறிக்கைகளின்படி, சேருவில பிரதேச செயலகத்தின் ரூபா 600,000 வீடமைப்புத் திட்டத்தில் 30 பயனாளிகளும், 2021 ஆம் ஆண்டுக்கான வீட்டுத்திட்டத்தின் கீழ் 30 பயனாளிகளுக்கும், ஒரு மில்லியன் ரூபா திட்டத்தின் கீழ் 32 பயனாளிகளுக்கும் வீடுகளை கட்டி முடித்துள்ளதாக குறிப்பிடப்பட்ட போதிலும், இந்த வீட்டுத்திட்டத்தின் கீழ் 44 பயனாளிகளின் | சேருவில - 2023 இறுதி காலாண்டில் நிதியேற்பாடு கிடைக்கப்பெற்றதுடன், அதனால் செயற்றிட்டத்தை முடிவுறுத்துவதற்கு எடுத்துக்கொண்ட காலம் போதுமானதாக இல்லை. கந்தளாய் - வீடுகளை பூர்த்தி செய்வதற்கு கால அவகாசம் போதாமையினால் கிடைக்கின்ற கட்டுநிதிக்கு | நிதி முன்னேற்றம் மற்றும் பௌதிக முன்னேற்றம் என்பன சுற்றறிக்கைக்கு ஏற்றவாறு சீர்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிதியுதவியின் மொத்த பெறுமதி ரூபா 2,308,000 2023 திசெம்பர் 31ஆம் திகதியளவில் சமுர்த்தி வங்கிக் கணக்கில் பிடித்து வைக்கப்பட்டிருந்த காரணமாக அவர்களின் வீடுகளின் வேலைகள் பூர்த்தியாக்கும் முன்னேற்றம் தொடர்பில் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளுடன் வீடுகளின் பௌதிக முன்னேற்றம் பொருந்தவில்லை. | ஏற்ப கட்டி முடிக்கப்படும். | |
| (ஈ) | மொறவெவ பிரதேச செயலகம் 2021 ஆம் ஆண்டில் வீட்டுத் திட்டத்தில் ரூபா 600,000 பெறுமதியான 30 வீடுகள் மற்றும் ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான 31 வீடுகள் தொடர்பாக இறுதி தவணைப் பணத்தின் கூட்டுப் பெறுமதியாக முறையே ரூபா 2,909,250 மற்றும் ரூபா 2,149,225 தொகைகள் 2022 ஆம் ஆண்டில் நான்கு சந்தர்ப்பங்களில் மொறவெவ சமுர்த்தி வங்கிக்கு அனுப்பப்பட்டிருந்தன. இந்த வீடுகளின் முன்னேற்றத்தின்படி, ரூபா 600,000 பெறுமதியான 16 வீடுகள் மற்றும் ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான 21 வீடுகளின் பௌதிகப் வேலைகள் முழுமையடையாமல் இருந்ததுடன் மற்றும் மீதிகள் ரீதியாக ஒரு மில்லியன் ரூபா வீடமைப்புத் திட்டத்தில் 22 பயனாளிகளிடமிருந்து ரூபா 3,365,000 ஆகவும், ரூபா 600,000 பெறுமதியான வீடமைப்புத் திட்டத்தின் 14 பயனாளிகளிடமிருந்து ரூபா 1,293,000 ஆகவும் என்றவகையில் இரண்டு வருட காலமாக பிடித்து வைக்கப்பட்டிருந்தன. | 2021 ஆம் ஆண்டு வீட்டுத் திட்டத்தில் வீடுகளின் கட்டுமான முன்னேற்றத்தின்படி, பௌதிக வேலைகள் முடிந்த வீடுகளுக்கு பணம் செலுத்தப்பட்டுள்ளது. சில சிறிய குறைபாடுகள் பூர்த்தியாக்கும் வரை சமுர்த்தி வங்கியில் பிடித்து வைக்கப்பட்டுள்ளன. சில பயனாளிகள் வெளிநாடு சென்றமை போன்ற சந்தர்ப்பங்களில் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்தாலும் பணம் விடுவிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. | வேலைகள் முடிக்கப்படாத வீடுகளின் வேலைகளை விரைவில் முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் MOUD&H/RD/04 /01 ஆம் இலக்க 2023 ஏப்ரல் 27 ஆம் திகதிய சுற்றறிக்கையின் 4.3.5 ஆம் பிரிவின் படி, 2023 வீட்டுத் திட்டம் 2023 நவம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் முடிக்கப்பட வேண்டிய போதிலும், மொறவெவ, பதவி ஸ்ரீ புர, கோமரங்கடவல, சேருவில, கந்தளாய் ஆகிய பிரதேச செயலகங்கள் அவ்வாறு செயலாற்றி இருக்கவில்லை என்பதுடன், **2023** திசெம்பர் **31**ஆம் திகதியன்று, ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான 41 வீடுகள் மற்றும் ரூபா 600,000 பெறுமதியான 33 வீடுகளின் வேலைகள் முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை. | 2023 வீட்டுத் திட்டம் 2023 நவம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் முடிக்கப்பட வேண்டிய போதிலும், நிதியேற்பாடு கிடைத்தல் தாமதமாதல் மற்றும் நிதியேற்பாடு கிடைக்கப்பெற்றதுடன் பின்னர் செயற்றிட்டத்தை முடிப்பதற்கு எஞ்சியிருந்த காலத்தினுள் பூர்த்திசெய்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் வேலைகளை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 செயற்றிட்டங்களை முடிவுறுத்தாது கைவிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கிராமிய வீதிகள் மற்றும் உட்கட்டமைப்பு செயற்றிட்டம் 2021 (RRDP) இன் கீழ் 69 வீதிகளை அமைப்பதற்காக மொத்தம் ரூபா 99 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டு வெருகல் மற்றும் மூதூர் பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், நிர்மாணப் பணிகளுக்காக மொத்தம் ரூபா 21.98 மில்லியன் தொகை ஒப்பந்ததாரர்களுக்கு கொடுக்கப்பட்டு, இந்தச் செயற்றிட்டம் செயற்படுத்தப்படாமல் கைவிடப்பட்டிருந்தது. | கிராமிய வீதிகள் மற்றும் உட்கட்டமைப்பு செயற்றிட்டத்தின் கீழ் 69 வீதிகளை அமைப்பதற்கான நிதியேற்பாடு கிடைத்து இரண்டு மாதங்களான குறுகிய காலத்தில் வெருகல் மற்றும் மூதூர் பிரதேச செயலகங்களில் பதிவுசெய்யப்பட்ட கிராம சபை ஒப்பந்ததாரர்களுக்கு இயலாத பணியொன்றாக இருந்தமையினால் செயற்றிட்டம் தாமதமாகி உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். | செயற்றிட்டங்களின் ஏற்பாடுகள் உச்சமாக பயன்படுத்துதல் வேண்டும். |

## 3.5 பெறுகைகள்

.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பெறுகை வழிகாட்டுநெறிகள் கோவையின் 5.4.11 இன்படி, ஏதேனும் ஒப்பந்த வேலைக்கு ஏற்புடைய கூட்டப்பட்ட பெறுமதி மீதான வரித் தொகையானது, குறித்த கூட்டப்பட்ட பெறுமதி மீதான வரி விலைப்பட்டியலை (VAT Invoice) பெற்ற பின்னரே உரிய ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட வேண்டிய போதிலும், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திலிருந்து கூட்டப்பட்ட பெறுமதி மீதான வரித் தொகைக்குரிய விலைப்பட்டியல் பெறப்படாமல் தம்பலகமுவ சமுர்த்தி வங்கியின் புதிய வங்கிக் கட்டடத்தை நிர்மாணிப்பதற்கான மொத்தம் ரூபா 284,846 ஆன கூட்டப்பட்ட பெறுமதி மீதான வரித் தொகையை ஒப்பந்ததாரருக்கு மாவட்டச் செயலகத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. | தவறு இடம்பெற்றுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். | பெறுகை வழிகாட்டுநெறிகள் கோவையின் வழிகாட்டல்களின் படி செயலாற்றுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மொறவெவ பிரதேச செயலகத்தின் புதிய கட்டடத்தை நிர்மாணிப்பதற்கான மொத்த செலவு மதிப்பீடு (TCE) ரூபா 11 மில்லியன் ஆக இருந்ததுடன், ரூபா 2.5 மில்லியன், ரூபா 5 மில்லியன் மற்றும் ரூபா 3.5 மில்லியன் ஆன மூன்று கட்டங்களில் நேரடி ஒப்பந்த முறைக்கிணங்க நிர்மாணிப்பதற்கு திட்டமிட்ட போதிலும், இந்த ஒப்பந்தத்தின் பேக்கேஜ் செய்தலானது முறையற்ற மற்றும் பெறுகை வழிகாட்டுநெறிகள் தொடர்பு இலக்கம் 4.4 இன் ஏற்பாடுகளுக்கு முரணாக மேற்கொள்ளப் பட்டிருந்தது. நேரடி ஒப்பந்தங்களுக்கான பெறுகை எல்லை ரூபா 05 மில்லியனாக இருந்தமையினால், ஒப்பந்தம் கட்டம் கட்டமாக பிரித்து செயற்படுத்தப்பட்டது. | மொறவெவ பிரதேச செயலக கட்டடத்தின் விரிவாக்கத்தை நிர்மாணிப்பதற்கு போதிய நிதியேற்பாட்டினை ஒதுக்கிக் கொள்வதற்கு முடியாத காரணத்தினால், பகுதி பகுதியாக நிதியத்தை தேடிக் கொள்வதற்கு நேரிட்டது. ஆதலால், கட்டடத்தின் விரிவாக்கம் கட்டம் கட்டமாக மேற்கொள்ளப்பட்டது. | பெறுகை வழிகாட்டுநெறிகள் கோவையின் வழிகாட்டல்களின் படி செயலாற்றுதல் வேண்டும். |

## 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | பிரதேச செயலாளர் 02 விடுதிகள் உட்பட 07 விடுதிகள் சேருவில பிரதேச செயலகத்திற்கு சொந்தமான போதிலும், 02 விடுதிகளில் மாத்திரம் வசிப்பதாக அவதானிக்கப்பட்டதுடன், அவ்வாறு வசிக்கும் 02 விடுதிகளிலும் பழுதுபார்க்கும் நிலையில் காணப்படுவதால், தற்போதுள்ள சொத்துக்களை உச்சளவில் பயன்படுத்த முடியவில்லை. அதன்படி, பிரதேச செயலாளரின் பழைய விடுதிகள், சோமபுர சுற்றுலா வங்களா மற்றும் 42 வருடங்களை கடந்த 05 பொது விடுதிகள் என்பன பழுதுபார்க்கப்பட வேண்டிய நிலையில் காணப்பட்டன. | சேருவில – அடிக்கடி நிதியேற்பாடு கோரியுள்ளதுடன், இலக்கம் 02 கொண்ட விடுதியின் பழுதுபார்த்தலுக்காக மட்டும் நிதியேற்பாடு கிடைத்துள்ளது. | சொத்துக்களை உச்சளவில் பயன்படுத்த வேண்டும். |
| (ஆ) | கோமரன்கடவல பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட 233A கிவ்லகடவல கிராம உத்தியோகத்தர் பிரிவில் வசிப்பவர்களுக்கு 2016, 2017 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளில் வழங்கப்பட்ட | 04 வீட்டு பயனாளி குடும்பங்கள், வசிப்பிடத்தை விட்டு வெளியேறிய 02 வீட்டு பயனாளி குடும்பங்கள் என்றவாறு அரசாங்கத்தினால் நிதியேற்பாடு வழங்கப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட | தேவையுள்ள பயனாளிகளுக்கு மாத்திரம் இனங்காணப்பட்டு வீடுகளை வழங்குவதற்கு |

| | | |
|---|---|---|
| வீடுகளில் வசிக்காத 07 பயனாளி குடும்பங்கள், வீடுகளில் தங்கியிருக்காது மதிய நேரங்களில் போய் வரும் 04 பயனாளி குடும்பங்கள் மற்றும் வசிப்பிடத்தை விட்டு வெளியேறிய 02 பயனாளி குடும்பங்கள் என்றவாறு அரசாங்கத்தினால் நிதியேற்பாடு வழங்கப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட அந்த வீடுகள் உண்மையாக வீட்டுத் தேவையுள்ள நபர்களுக்கு கிடைத்திருக்கவில்லை. | அந்த வீடுகள் உண்மையாக வீட்டுத் தேவையுள்ள நபர்களுக்கு கிடைத்திருக்கவில்லை. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.7 முகாமைத்துவ பலவீனங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சேருவில பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளருக்கென அட்டவணைப்படுத்தப்பட்ட 02 விடுதிகள் உள்ளன என்பதுடன் அவற்றில் ஒன்று 2018 ஆம் ஆண்டில் கட்டப்பட்டு தற்போது சமுர்த்தி அலுவலகமாக இயங்குகிறது. மற்றைய விடுதி தற்போது பழுதடைந்த நிலையில் காணப்படுவதுடன், குறித்த விடுதி பழுதுபார்க்கப்பட்டு பாவனைக்கு உகந்த நிலையில் காணப்படுவதுடன் பிரதேச செயலாளர் குறித்த விடுதியில் வசிக்கவில்லை. | சமுர்த்தி கட்டடம் இடிந்து வீழ்ந்துள்ளமையினால் பிரதேச செயலாளர் விடுதியிலேயே சமுர்த்தி அலுவலகம் இயங்கி வருகின்றது. ஆகையினால், பிரதேச செயலாளர் விடுதியில் வசிக்கவில்லை. வீட்டிலிருந்து கடமைக்கு செல்ல அனுமதி கோரியுள்ளார் என்பதுடன் வீட்டிலிருந்து வந்து தேவையான அனைத்து கடமைகளையும் மேவுதல் செய்துள்ளார். | அட்டவணைப்படுத்தப்பட்ட வீடுகளை உச்ச விதத்தில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சேருவில பிரதேச செயலகத்திற்குட்பட்ட அட்டவணைப்படுத்தப்படாத ஏனைய 05 விடுதிகள் மற்றும் சோமபுர சுற்றுலா பங்களாவின் காணி, கட்டடங்களின் உரிமை சேருவில பிரதேச செயலகத்திற்கு சொந்தமாக இருக்கவில்லை என்பதுடன், குறித்த காணிகள் மற்றும் கட்டடங்களின் உரிமையை செயலகத்திற்கு கைமாற்றிக் கொள்வதற்கு கணக்காய்வுத் திகதியான 2024 பெப்ரவரி 08 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த வீடுகளின் உரிமை உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு கைமாற்றப்பட்டுள்ளதாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை எமக்கு அறிவித்துள்ள போதிலும், அதற்கான ஆவணங்கள் இந்த அலுவலகத்திற்கு கிடைக்கவில்லை. அதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. | காணியின் உரிமையை சிக்கல்களின்றி கைமாற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | திருகோணமலை நகரமும் பட்டிணமும் பிரதேச செயலகப் பிரிவில் முகாமை உதவியாளர் சேவையின் III தரத்தில் பணிபுரிந்த பெண் உத்தியோகத்தர் ஒருவர் போலியான பரீட்சை பெறுபேறுகளை சமர்ப்பித்து 2015 செப்தெம்பர் 15 ஆம் திகதி முதல் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரை சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளாக ரூபா 3,305,197 பெற்றிருந்தார். அதற்கு மேலதிகமாக பெற்றுக்கொண்டிருந்த இடர் கடனின் 2022 திசெம்பர் **31** ஆம் திகதியன்று செலுத்த வேண்டிய மீதி ரூபா 205,650 ஆக இருந்ததுடன், 2015 ஒக்டோபர் 14 ஆம் திகதி முதல் 2016 பெப்ரவரி 25 ஆம் திகதி வரை முழு சம்பளத்துடனான மகப்பேறு லீவுகள் அத்துடன் 2019 ஆகஸ்ட் 27 ஆம் திகதி முதல் 2019 செப்தெம்பர் 05 ஆம் திகதி வரை 10 நாட்கள் நாட்டிலிருந்து வெளியேறுவதற்கான லீவுகளையும் எடுத்திருந்தார். | i.பரீட்சை பெறுபேறுகள் போலியானவை என உறுதிப்படுத்தியதன் பின்னர் அவளது சேவை இடைநிறுத்தப்பட்டது.<br><br>ii.இடர் கடனாக அரசாங்கத்திற்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 205,650.00 தொகை அவளது பிணையாளரிடம் இருந்து தவணைகளில் அறவிடப்படப்படுகின்றது.<br><br>iii. 2015 - 2021 வரையான காலப்பகுதியில் தனிப்பட்ட கோப்புகள் தொடர்பாக செயலாற்றிய உத்தியோகத்தரிடம் உரிய தாமதத்திற்கான காரணங்கள் வினவப்பட்டுள்ளன.<br><br>iv.சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளாக வழங்கப்பட்ட ரூபா 3,305,197 தொகையை 2024-05-21 ஆம் திகதிக்கு முன்னர் அரசாங்கத்திற்கு செலுத்துமாறு பெண் உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | தகைமைகளை பரீட்சிக்காமல் உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்தல் தொடர்பாகவும், இதனால் அரசுக்கு ஏற்பட்ட நட்டத்தை தீர்த்துக் கொள்ளல் தொடர்பாகவும் உடனடியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2019/2020 பெரும் போகத்தில் நெல் கொள்வனவு செய்யும் துரித வேலைத்திட்டத்தின் கீழ், கந்தளாய் பிரதேச செயலகத்தின் 04 அரிசி ஆலை உரிமையாளர்களிடமிருந்தும், லங்கா சதொச நிறுவனத்திடமிருந்தும் கிடைக்க வேண்டிய மொத்த பெறுமதி ரூபா 6,490,269 ஆன 77,146 கிலோ கிராம் அரிசிக்கு ஏற்புடைய பணம் 03 வருடங்கள் கடந்த போதிலும், மாவட்ட செயலகத்தினால் அறவிடப்பட்டிருக்கவில்லை. | சட்ட நடவடிக்கையாக கந்தளாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த விடயத்தில் குற்றவியல் தவறு இடம்பெற்றதற்கான அறிகுறிகள் எதுவும் காணப்படவில்லை என தெரிவித்துள்ள கந்தளாய் பொலிஸார் மேலதிக ஆலோசனைகளை சட்டமா அதிபரிடம் கோரியுள்ளனர். | உரிய பணத்தை உடனடியாக அறவிடப்பட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பாக உத்தியோகத்தர்கள் போதுமான அளவு அறிந்திருக்கவில்லை என்பதுடன் நிலையான அபிவிருத்தி இலக்குகளை இனங்காணாமையினால், மீளாய்வாண்டில் எந்த மதிப்பீடும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி திட்டமொன்றை தயாரித்து தருமாறு கோரிக்கையொன்று நிலைபேறான அபிவிருத்தி பேரவையின் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | நிலையான அபிவிருத்தி இலக்குகளை இனங்கண்டு செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 5. மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியளவில், சிரேஷ்ட மட்டத்திலான உத்தியோகத்தர் 15 பதவி வெற்றிடங்களும், மூன்றாம் நிலை மட்டத்திலான உத்தியோகத்தர் 24 பதவி வெற்றிடங்களும், இரண்டாம் நிலை மட்டத்திலான உத்தியோகத்தர் 39 பதவி வெற்றிடங்களும், ஆரம்ப நிலை மட்டத்திலான உத்தியோகத்தர் 37 பதவி வெற்றிடங்களும் என மொத்தம் 115 வெற்றிடங்கள் காணப்பட்டன. | வெற்றிடங்களை நிரப்புவதற்காக வெற்றிடங்கள் பற்றிய அறிக்கையுடன் பதவியணியை மாதந்தோறும் நாளதுவரைப்படுத்தி உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கும், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துக்கும் அனுப்பப்பட்டுள்ளது. சில வெற்றிடங்கள் எங்கள் கோரிக்கையின்படி நிரப்பப்பட்டுள்ளன. | அத்தியாவசிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டினுள், மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் 05 வருடங்களை கடந்த சேவைக் காலத்தை கொண்ட 455 உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றல் கொள்கை நடைமுறைப்படுத்தப்படவில்லை. | ஆண்டு இடமாற்றத் திட்டத்தின் கீழ் பல உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். விசேட கவனம் தேவைப்படும் உத்தியோகத்தர்களின் சில கோரிக்கைகள் அலுவலகப் பணிகளுக்கு குறைந்த பாதிப்பு ஏற்படும் வகையில் கருத்திலெடுக்கப்பட்டன. | 2001 ஆகஸ்ட் 22ஆம் திகதிய, 18/2001 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை பிரகாரம் செயலாற்றுதல் வேண்டும். |